[1972 ஆகஸ்ட் 23

Dr. H. V. HANDE : May I know whether this Government discussed any details about starting of any industires in Tamil Nadu? If so may I know the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : குறிப்பிட்ட எந்தத் தொழிலைப் பற்றியும் விவாதிக்கவில்லை. பொதுவாகத் தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சி பற்றி விவாதித்தோம்.

திரு. எம். சுரேந்திரன் : தொழில்களைப் படிப்படியாக அரசாங்கம் எடுத்துக் கொள்வதில் 5 கோடி ரூபாய்க்கு மேல் மூலதனமுள்ள தொழில்களை அரசாங்கம் எடுத்துக் கொள்ளலாம் என்று கருதுகிறதா அல்லது இன்னும் அதிக அளவில் மூலதனம் இருக்கக் கூடிய தொழில்களைத் தான் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கருதுகிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எல்லாத் தொழில்களையும் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று எப்போதும் அரசாங்கம் சொன்னதில்லை. தொழில் கொள்கையும், பொருளாதாரக் கொள்கையும் திட்டவட்டமாகச் சொல்லப்பட வேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். மோனாபலி என்ற பெயரால் தொழில் வளர்ச்சிக்குக் குந்தகம் செய்யாது தொழில் திட்டத்தைச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். இந்த அரசைப் பொறுத்தவரை ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் மூலதனம் உள்ள எல்லாத் தொழில்களையும் அரசு ஏற்று நடத்த வேண்டுமென்ற கொள்கையைப் பரிசீலித்து வருகிறோம்.

காகிதத் தயாரிப்புத் தொழில்

* 284 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்மிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் செய்திடும் தொழிற்சாலை அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தஞ்சை மாவட்டத்தில் திரு. ஆரூரான் சர்க்கரை ஆலை இருக்கும் வடபாதி மங்கலத்தில் காகிதத் தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றிப் பரிசீலிக்கப்பட்டுள்ளதா? நெல்லிக்

1972 ஆகஸ்ட் 23]

குப்பம், போரூர் சர்க்கரை ஆலைச் சக்கைகளையும் இங்கே கொண்டு வந்து தொழிற்துறையில் பின்னடைந்துள்ள தஞ்சையில் கூட்டுறவுத் துறையில் ஒரு காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாட்டில் சுமார் 9 லட்சம் டன் 'பகஸ்' இருக்கிறது. பெரும்பாலும் இவற்றை ஆலையில் ஃப்யூவலுக்குப் பயன்படுத்துகிறார்கள். ப்யூவலுக்கு ஆல்டர் நேடிவ் கண்டுபிடித்தாலொழிய காகிதத் தொழிற்சாலைக்கு இதைப் பயன் படுத்துவது கஷ்டமாக இருக்கும்.

Thiru B. VENKATASWAMY : We are importing paper from other Nations. May I request the Hon. Minister whether there is any concrete proposal so as to use bagasse from all the sugar factories in the State to manufacture paper in our State itself.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போதுதான் பதில் சொன்னேன். இப்போது இதை ஃப்யூவலுக்குப் பயன்படுத்துகிறார்கள். அதற்கு மாற்று ஏற்பாடு செய்தால்தான் அதைக் செய்யப் பயன்படுத்த முடியும்.

*285 வினா.—திரு. பெ. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காகிதக்கூழ், காகித உற்பத்தி ஆகியவைகளுக்கு வேண்டிய இயந்திர சாதனங்களை உற்பத்தி செய்ய சென்னைக்கு அருகாமையில் ஒரு தொழிற்சாலை நிறுவும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இதுபோன்ற சாதனங்கள் தற்போது எங்கிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த விவரங்கள் என்னிடத்தில் இல்லை.